# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.38 (L.W.62)

| | | | |
|---|---|---|---|
| Name | : Mala | Caste | : Hindu |
| Father's Name | : Ramamurthy(Late) | Calling | : Doctor( Medical) |
| Village | : | Religion | : Hindu |
| Taluk | : Chrompet | Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.02.2025.

(A1 and A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A2 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.55 P.M.**

நான் தற்போது ஸ்டான்லி மருத்துவமனை சென்னையில் மயக்கவியல் துறையில் பேராசிரியராக உள்ளேன். 26.06.2015 அன்று நான் உதவி மயக்க மருத்துவ அலுவலராக 24 மணி நேர பணியில் 26.06.2015 அன்று காலை 09.00 மணி முதல் 27.06.2015 அன்று காலை 09.00 மணி வரை இராஜிவ் காந்தி பொது மருத்துவமனையில் இருந்தேன்.

ஷமீல்பாஷா என்ற 26 வயது ஆணின் அவசர சிகிச்சைக்காக என்னை அழைத்தார்கள். அவருக்கு சுவாசத்தில் மூச்சு தினறல் இருந்ததால் அவரை பார்ப்பதற்காக அவசர சிகிச்சைக்காக என்னை அழைத்தார்கள். 213 வது வார்டில் இருந்து அழைத்தார்கள். அவரை நான் என்னுடைய பயிற்சி மருத்துவர்களுடன் சென்று பார்த்தேன்.

அவர் அப்போது மிகவும் மூச்சு விடுவதற்கு சிரமமான நிலையில் இருந்தார். அவருடைய நாடி துடிப்பு 130, இரத்த அழுத்தம் 150/110, இரத்த ஆக்ஸிஜன் அளவு 75 சதவீதம், இரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு குறைந்துக்கொண்டே இருந்தது. அதனால் அவருக்கு மூச்சு பாதையில் ET tube பொருத்தி அவருக்கு செயற்கை சுவாசம் கொடுப்பதற்காக கொருத்திவிட்டோம்.

அதற்கு பின் அவருடைய இரத்த ஆக்ஸிஜன் அளவு 94 சதவீதமாக உயர்ந்தது. அவரை 20 நிமிடம் பார்த்துவிட்டு அங்கே இருந்த வார்டு மருத்துவரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றோம். நான் பதிவு செய்த விவரங்களை நான் சொல்ல சொல்ல என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய பயிற்சி மருத்துவ மாணவர்கள் எழுதினார்கள்.

அவருக்கு நுரையீரலில் இரண்டு பக்கமும் நீர் கோர்த்துக்கொண்டிருந்தது. நுரையீரலில் ஸ்டேதஸ்கோப் வைத்து பார்க்கும்போது கொடகொட என்ற சத்தம் கேட்டது. அவரால் சரியாக மூச்சு விடமுடியவில்லை. நான் நோயாளியின் விவரத்தை பதிவு செய்த ஆவணம் அ.த.சா.ஆ.57. அது ஒரு பக்கம் அடங்கியதாகும்.

அதன் பின்பக்கம் எழுதியது Duty post graduate Intensive surgical care unit என்பவர் எழுதியுள்ளார். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள். அ.த.சா.ஆ.57 ஆவணம் ஒளி நகல் ஆவணம் என்பதால் அதை குறித்து எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீட்டு செய்யப்படுகிறது. அது குறித்து வழக்கின் இறுதியில் வாதுரைக்கலாம்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக case sheet–ல் நோயாளியின் பெயரை பார்த்துவிட்டுதான் நோயாளிக்கு சிகிச்சை அளிப்போம் என்றால் சரிதான். Case sheet–ல் நோயாளியின் பெயர் Shameel Basha என்று உள்ளது. Case sheet–ல் நான் குறிப்பு எழுதிய பின் என்னுடைய பெயரை பெரிய எழுத்துக்களில் எழுத வேண்டும் என்றால் சரிதான். நான் ஏன் அவ்வாறு பெரிய எழுத்துக்களில் எழுதவில்லை என்றால் நோயாளியை பார்க்கும் பரபரப்பான சூழ்நிலையில் எழுதவில்லை.

Case sheet–ல் எத்தனையாவது பக்கத்தில் நான் எழுதினேன் என்றும் எத்தனையாவது மருத்துவராக எழுதினேன் என்று எனக்கு தெரியாது. பொதுவாக Case sheet–ல் நோயாளிக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவரின் பெயரை முதலில் எழுதிவிட்டு பின்பு சிகிச்சையை எழுதுவோம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.57 ல் நான் கையொப்பம் கூட இடவில்லை என்றால் சரிதான். அதில் உள்ள வாசகங்களை நான் எழுதவில்லை. என் முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுதினார்கள்.

அ.த.சா.ஆ.57 ல் தேதியை எழுதிய கையெழுத்தும், நேரம் எழுதிய கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என்றால் அதைப்பற்றி என்னால் சரியாக சொல்ல முடியவில்லை. நோயாளி எந்த நேரம் முதல் எந்த நேரம் வரை மூச்சு திணறலில் இருந்தார் என்று நான் Case sheet ல் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பார்த்த நிலைமையில் நோயாளிக்கு 12 மணி நேரத்திற்கு மேலாக சிகிச்சை அளிக்காத நிலையில் பிழைப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான்.

போலீசார் என்னை விசாரிக்கும்போது நோயாளியின் மருத்துவ அசல் ஆவணங்களை வைத்துதான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றாலும் அதை அவர்கள் எழுதிக்கொண்டார்கள் என்றாலும் கேட்டார்கள் நான் சொன்னேன். அதை அவர்கள் எழுதினார்களா என்று எனக்கு தெரியாது. நான் சொல்லியதை போலீசார் பதிவு செய்துக்கொண்டார்களா என்றால் நினைவில்லை.

அவசர சிகிச்சை பிரிவில் நோயாளியின் Case sheet ல் எவ்வளவு நேரத்திற்கு ஒரு முறை பதிவிடுவார்கள் என்றால் மாற்றங்கள் ஏற்படும்போது அதை நாங்கள் பதிவிடுவோம். போலீசார் விசாரணையில் நான் முதல் விசாரணையில் கூறிய நோயாளியின் ஆக்ஸிஜன் அளவு, இதய துடிப்பு, இரத்த அழுத்தம் ஆகியவற்றை குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. இதய துடிப்பு இரண்டும் சரியான நிலையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் நோயாளியை பார்த்த பின்னர்தான் ET tube போடப்பட்டது. அதற்கு முன்னர் போடவில்லை. RS–BAE என்ற நிலை இரண்டு நுரையிரலிலும் காற்று உள்ளே செல்கிறது என்பது குறித்து எனக்கு முன்பு பார்த்த மருத்துவர்கள் குறிப்பு எழுதினார்களா என்றால் நான் பார்க்கவில்லை. நோயாளியை நான் ஸ்டேதஸ்கோப் வைத்துதான் பார்த்தேன். சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ ஸ்கேனை பார்க்கவில்லை.

என்னை யார் நோயாளியை பாரக்க Refer செய்தார்கள் என்றும் நேரமும் குறிக்கவில்லை. நுரையீரலில் நீர் அதிகமாக கோர்த்திருப்பதற்கு I.V fluivs அதிகமாக செலுத்தப்பட்டால் நுரையீரலில் நீர் கோர்க்க வாய்ப்பிருக்கிறது.

நான் நோயாளியை பார்த்து Diagnosis செய்து எண்டோ டிரக்கியல் டியூப் போடுவதற்கு ஒரு மணி நேரம் ஆகும் என்றால் சரியல்ல. 15 விநாடிகளில் பொருத்திவிட வேண்டும். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலிருந்து வேறுபட்டு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லியதுபோல் நோயாளிக்கு அந்த நேரத்தில் நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த ஆவணம் என்னால் எழுதப்பட்டது இல்லை என்றாலும் அதை சிபிசிஐடி போலீசார்தான் எழுதினார்கள் என்றாலும் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

அ.த.சா.ஆ.57 ல் நோயாளியின் பெயர் இல்லை. அ.த.சா.ஆ.57 ல் பணி மருத்துவரின் கையொப்பம் இல்லை. என்னுடைய கையொப்பமும் அதில் இல்லை. சிபிசிஐடி போலீசார் என்னை என்று விசாரித்தாரகள் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. மருத்துவம் பார்த்த ஒரு ஆண்டுக்குள் விசாரித்தார்கள்.

நான் நோயாளிக்கு Clinical Diagnosis செய்யதான் அழைக்கப்பட்டேன் என்றால் சரிதான். It is referral also. It is not takeover. அ.த.சா.ஆ.57 ல் உள்ள விவரங்கள் என்னுடைய மருத்துவ மாணவர்கள் எழுதியது. எந்த மாணவர்கள் எழுதினார்கள் என்ற குறிப்பு அதில் இல்லை. நான் நோயாளியின் முந்தைய மருத்துவ குறிப்புககளை பார்த்ததாக நான் அ.த.சா.ஆ.57 ல் குறிப்பிடவில்லை. ஆனால் நோயாளியின் முந்தைய மருத்தவ குறிப்புகளை பார்த்துதான் சிகிச்சை அளித்தேன்.

சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது நோயாளியின் மருத்துவ குறிப்புகளை பார்த்து சிகிச்சை அளித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மறுநாள் காலை 09.00 மணி வரை நான் பணியில் இருந்தபோதும் நோயாளி என்ன ஆனார் என்று நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நோயாளிக்கு நான் சிகிச்சையே அளிக்கவில்லை என்றாலும் சிபிசிஐடி போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பின்னிட்டு போலீசாரால் தயாரித்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.45 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.14 17:21:03 +0530